சம்பா நெல் விலை கடும் வீழ்ச்சி!

First Published : 25 Jan 2011 12:21:26 AM IST



கடலூர், ஜன. 24: கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து உள்ளதால், நெல்லை சேமித்து வைத்து, உரிய விலை கிடைக்கும் காலத்தில் விற்பனை செய்ய வசதியாக, சேமிப்புக் கிடங்கு வசதிகளை அரசு உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

÷கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் 1.24 லட்சம் ஏக்கர் உள்பட 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது.

÷தற்போது காட்டுமன்னார்கோவில், சேத்தியாத்தோப்பு, ஸ்ரீமுஷ்ணம், வடவாறு பாசனப் பகுதிகள் பெண்ணாடம், கறிவேப்பிலங்குறிச்சி பகுதிகளில் 40 ஆயிரம் ஏக்கரில் நெல் அறுவடை தொடங்கி விட்டது.

÷இதுவரை 15 ஆயிரம் ஏக்கரில் அறுவடை முடிவடைந்து விட்டது.

÷நெல் கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம், 112 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு உள்ளன.

÷இந்நிலையில் நெல் வியாபாரிகள் அறுவடை இயந்திரங்களுடன், நெல் கொள்முதலில் களத்தில் இறங்கி உள்ளனர்.

÷தற்போது அறுவடை ஆகும் சன்னரக நெல்லுக்கு, அரசு நேரடிக் கொள்முதல் நிலையங்களில் குவிண்டாலுக்கு ரூ. 1,100 வழங்கப்படுகிறது. இதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ. 10 முதல் ரூ. 11 வரை தற்போது விலை கிடைக்கிறது.

÷ஆனால் தனியார் நெல் வியாபாரிகள், சன்னரகம் மூட்டை (62 கிலோ) ரூ. 628-க்கு கொள்முதல் செய்கிறார்கள் (கிலோ விலை சுமார் ரூ. 11).

÷பொதுவாக சம்பா அறுவடை காலத்தில் சன்னரக நெல்லுக்கு அரசு கொள்முதல் நிலையங்களைவிட, தனியார் வியாபாரிகள் குறைந்தது ரூ. 100 ஆவது கூடுதல் விலை கொடுத்து கொள்முதல் செய்வார்கள்.

÷மேலும் டிசம்பர் மாதத்தில் பி.பி.டி. நெல் (பழையது) குவிண்டால் ரூ. 1,500-க்கு விவசாயிகள் விற்பனை செய்து உள்ளனர்.

÷எனவே இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தற்போது தனியார் வியாபாரிகளின் கொள்முதல் விலை, அடிமாட்டு விலை என்றும், நெல் சாகுபடிச் செலவைக் கணக்கிட்டால் இந்த விலை கட்டுபடியாகாது என்றும் கூறுகிறார்கள் விவசாயிகள்.

÷களத்துக்கே வந்து தனியார் கொள்முதல் செய்கிறார்கள் என்பதைவிட, அரசு கொள்முதல் நிலையங்களைவிட எந்த வகையிலும் தனியார் வியாபாரிகளால் விலையில் ஆதாயம் இல்லை என்றும் விவாயிகள் கூறுகிறார்கள்.

÷எனவே நெல்லை சேமித்து வைத்து நியாயமான விலை கிடைக்கும் காலத்தில் விற்பனை செய்வதற்கு ஏற்றவகையில், அரசு சேமிப்புக் கிடங்கு வசதிகளை மேம்படுத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்கிறார்கள் விவசாயிகள்.

÷இது குறித்து மாவட்ட உழவர் மன்றங்களில் கூட்டமைப்பின் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், "சன்னரக நெல் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து உள்ளது. விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க, மத்திய மாநில அரசுகளின் சேமிப்புக் கிடங்குகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் சேமிப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும். ÷இங்கு சேமிக்கும் விவசாயிகளுக்கு விளைப் பொருளின் அடக்க விலையில் 90 சதவீதம் கடன் வழங்கப்படுகிறது. இந்த வசதியை விரிவுபடுத்த வேண்டும்.

÷நெல்லுக்கு மத்திய அரசு அறிவித்து இருக்கும் கூடுதல் விலை அடிப்படையில் தமிழகத்தில் நெல் விலையை உயர்த்த வேண்டும்' என்றார்.

÷காவிரி டெல்டா விவசாயிகள் சங்க துணைத் தலைவர் கண்ணன் கூறுகையில், "டிசம்பர் மாதத்தில் சன்னரக நெல் குவிண்டாலுக்கு ரூ. 1,500 கிடைத்தது. ஆனால் தற்போது ரூ.1,100-க்கு மேல் கிடைக்கவில்லை.

÷தனியார் வியாபாரிகள் நெல் வாங்கவே தயக்கம் காட்டுகிறார்கள். காரணம் கர்நாடக மாநிலத்தில் இருந்து சன்னரக நெல்லும் அரிசியும் வந்து குவிந்து கொண்டு இருக்கிறது.

÷சன்னரக நெல் குவிண்டால் ரூ. 1,100-க்கு கொள்முதல் செய்தால் அதில் இருந்து கிடைக்கும் அரிசி விலை, மூட்டைக்கு லாபம் ரூ. 250 உள்பட கிலோ ரூ. 20 தான்.

÷ஆனால் சந்தையில் சன்னரக அரிசி விலை, கிலோவுக்கு ரூ. 30-க்குக் கீழ் குறையவில்லை. அந்த விலை விவசாயிக்குக் கிடைக்கவில்லையே. காரணம் இடைத்தரகர்கள். ÷தற்போது நெல் கொள்முதல் செய்பவர்கள் பெரும்பாலும் இடைத்தரகர்கள்தான். குறைந்தபட்சம் மத்திய அரசு அறிவித்து இருக்கும் புதிய விலை அடிப்படையில், தமிழக அரசு நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்' என்றார்.

**ரேஷனில் ரூ. 30-க்கு துவரை, உளுத்தம் பருப்பு: பிப்ரவரி 1 முதல் அமல்**

First Published : 25 Jan 2011 02:28:32 AM IST



சென்னை, ஜன. 24: ரேஷன் கடைகளில் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு கிலோ ரூ 30-க்கு விற்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. இந்த விலைக்குறைப்பு பிப்ரவரி 1-ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

ரேஷனில் இப்போது துவரம், உளுத்தம் பருப்பு கிலோ ரூ.40-க்கு விற்கப்படுகிறது.

வட இந்தியாவில் நிலவும் கடும் குளிர் காரணமாக பயிர் உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. துவரம், உளுத்தம் பருப்பு போன்றவை குவிண்டாலுக்கு ரூ. 500 முதல் ரூ. 600 வரை அதிகரித்துள்ளன. பொங்கல் பண்டிகைக்குப் பிறகு கிலோவுக்கு ரூ. 5 வரை விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்தில், சில்லறை விற்பனையில் கிலோ துவரம் பருப்பு ரூ. 65-க்கும், உளுத்தம் பருப்பு ரூ. 78-க்கும் விற்கப்பட்டு வருகிறது. உணவுத் துறையின் கீழ் இயங்கி வரும் அமுதம் அங்காடிகளில் துவரம் பருப்பு ரூ. 53-க்கும், உளுத்தம் பருப்பு (முதல் தரம்) ரூ. 67-க்கும், இரண்டாம் தரம் ரூ. 60-க்கும், மூன்றாம் தரம் ரூ. 55-க்கும் விற்கப்படுகிறது.

**தொடர் நடவடிக்கை:** விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் மத்திய அரசு அண்மையில் கோரிக்கை விடுத்தது. இதையடுத்து, அதிகாரிகள்

கூட்டத்தை முதல்வர் கருணாநிதி கூட்டினார். சென்னை, புறநகர்ப் பகுதிகளில் உழவர் சந்தைகளை அமைப்பது உள்ளிட்ட முக்கிய முடிவுகள் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து, ரேஷன் பொருள்களின் விலையையும் தமிழக அரசு குறைத்துள்ளது. ரேஷனில் ஒரு கிலோ துவரம், உளுத்தம் பருப்பு ரூ 30-க்கு விற்கப்படும் என முதல்வர் கருணாநிதி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று, ஒரு லிட்டர் பாமாயில் ரூ 25-க்கு விற்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். இப்போது பாமாயில் லிட்டருக்கு ரூ 30-க்கு விற்கப்படுகிறது.

இந்த விலைக் குறைப்பு பிப்ரவரி 1-ம் தேதி முதல் ரேஷன் கடைகளில் அமலுக்கு வரும் என அவர் உத்தரவிட்டுள்ளார்.

**விவசாயத் தொழிலாளர் சங்கம்**

First Published : 24 Jan 2011 03:00:32 PM IST

பண்ருட்டி, ஜன. 23: விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் பண்ருட்டி பஸ் நிலையம் எதிரில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு, வட்டத் தலைவர் லாரன்ஸ் தலைமை வகித்தார்.

அகில இந்திய மாதர் சங்க மாவட்டத் தலைவர் வாலண்டினா, விவசாயத் தொழிலாளர் சங்க வட்டச் செயலர் ஏழுமலை, பொருளர் தணிகாசலம், மாவட்டக் குழு உறுப்பினர் உத்தராபதி, வட்டச் செயலர் சேதுராஜன், நகரச் செயலர் மோகன், தொழிற்சங்கத் தலைவர் அர்ச்சுணன் உள்ளிட்டோர் கண்டன உரை
நிகழ்த்தினர்.

**பயிர்ச் சேதம் குறித்த ஆய்வு**

First Published : 24 Jan 2011 12:25:32 PM IST

சிவகங்கை, ஜன. 23: இளையான்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பயிர்ச் சேதம் குறித்த ஆய்வுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

மாவட்ட வருவாய் அலுவலர் வேம்புநாதன் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர் சுப. மதியரசன், கோட்டாட்சியர் துர்காமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாயிகளுக்கு, குறிப்பாக மிளகாய்ப் பயிரை பயிரிட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் கிடைக்க துரித நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. வட்டாட்சியர் முருகானந்தம், தோட்டக் கலை அலுவலர் ரேகா, விவசாய அலுவலர்கள் (தோட்டக் கலை) ரவிசங்கர், நாகராஜன், பாலமுருகன்,

துணை வட்டாட்சியர்கள் கார்த்திகைராணி, விஜயகுமாரி, கிராம நிர்வாக அலுவலர் சங்கத் தலைவர் அங்குசாமி கலந்து கொண்டனர்.

**தாழ்த்தப்பட்ட இன விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்**

First Published : 24 Jan 2011 01:18:07 PM IST

தஞ்சாவூர், ஜன. 23: தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இன விவசாயிகள் மானிய விலையில் வேளாண் கருவிகள் பெற விண்ணப்பிக்கலாம் என்றார் மாவட்ட வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் எ. ராசேந்திரன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தாழ்த்தப்பட்ட இன விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வழங்க அரசு ரூ. 65.65 லட்சம் மானியம் அனுமதித்து உத்தரவிட்டுள்ளது.

பவர் டில்லர், ரோட்டவேட்டர், பல்வகை தானியம் பிரித்தெடுக்கும் கருவி, பவர் வீடர் போன்ற இயந்திரங்கள், அதற்கு அனுமதிக்கப்பட்ட மானியம் குறித்த விவரங்களைப் பெற தொடர்புடைய உப கோட்ட அலுவலகங்களை விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

மேலும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி சாலை, கிருஷ்ணாநகரிலுள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம், பட்டுக்கோட்டை பாளையம் சாலையில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம் ஆகியவற்றில் இதற்கான விவரங்களை விவசாயிகள் பெறலாம் என்றார் அவர்.

**முல்லைப் பெரியாறில் புதிய அணை?**

First Published : 24 Jan 2011 03:11:55 AM IST

கொச்சி, ஜன. 23: முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்கு எந்த அளவுக்கு சாத்தியம் உள்ளது என்பது குறித்து அறிக்கை அளிக்குமாறு கேரள அரசிடம் உயர் நிலைக்குழு அறிக்கை கேட்டுள்ளது.

முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட வேண்டுமென்பதில் தீவிரம் காட்டி வரும் கேரள அரசு, இதுகுறித்த அறிக்கையை விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அணை கட்ட தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கேரள அரசு கூறியிருப்பது: முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்கான அவசியம், பழைய அணையை இடிப்பதற்கான தேவை போன்றவை குறித்து ஏற்கெனவே கேரள அரசு விரிவாக ஆராய்ந்து உச்ச நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

இப்போது உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான உயர்நிலைக் குழுவும் முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டுவதற்கான சாத்தியம் குறித்து அறிக்கை கேட்டுள்ளது. எனவே அவர்களிடமும் அறிக்கை அளிக்கப்படும். புதிய அணைக்கான சாத்தியம் குறித்து உயர்நிலைக் குழு கேட்டிருப்பது கேரள அரசின் நிலைக்கு சாதகமான அம்சம். இது வரவேற்கத்தக்கது என்று கேரளம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
முன்னதாக தமிழக விவசாயிகள் பலன் பெறும் வகையில் முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி அளவுக்கு நீரைத் தேக்க வேண்டுமென தமிழகம் சார்பில் வலியுறுத்தப்பட்டது. இதில் தமிழக அரசுக்கு சாதகமாக உச்ச நீதிமன்றமும் தீர்ப்பு வழங்கியது. ஆனால் கேரள அரசு இதற்கு எதிராக பேரவையில் சட்டம் இயற்றி அணையில் 136 அடி வரையே நீரைத் தேக்கியது.
மேலும் இப்போதுள்ள அணையை இடித்து விட்டு புதிய அணையைக் கட்ட வேண்டுமென்றும் கேரள அரசு கூறி வருகிறது. ஆனால் தமிழக விவசாயிகளின் நலன் கருதி புதிய அணை கட்டக்கூடாது என தமிழகம் கூறி வருகிறது.
இது குறித்து விசாரிக்க, முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ். ஆனந்த் தலைமையில் உயர்நிலைக் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்தது. இக்குழுவினர் இப்போது கேரள அரசிடம் அறிக்கை கேட்டுள்ளனர்.

தினமலர்

**மணிலாவிற்கு ஜிப்சமிடுங்கள் : வேளாண் உதவி இயக்குனர்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:47 IST

வாலாஜாபாத் : வாலாஜாபாத் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் மணிலா சாகுபடி செய்த விவசாயிகள், மணிலா பயிர்களுக்கு இரண்டாம் கட்டமாக ஜிப்சம் உரமிட வேண்டும் என, வாலாஜாபாத் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் தெரிவித்தார்'.அவர் கூறியதாவது:வாலாஜாபாத் வட்டாரத்தில் தற்போது, 5,000த்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் மணிலா பயிரிடப்பட்டுள்ளது. 30 நாட்களான பயிர்களுக்கு கந்தகம் மற்றும் சுண்ணாம்பு கலந்த ஜிப்சம் உரமிட வேண்டும். இதன் மூலம், மணிலா (நிலக்கடலை) விதை திரட்சியாக கூடுதல் வளர்ச்சிபெறும். எண்ணெய் சத்து அதிகரிக்கும். வாலாஜாபாத் வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் பரந்தூர் வேளாண்மை துணை கிடங்கில், போதிய ஜிப்சம் இருப்பு உள்ளது. இவை, 50

சதவீதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு முருகன் தெரிவித்தார்.

**நெல் விளைந்த நிலங்களில் "கல்' முளைத்த பரிதாபம்:கள்ளக்குறிச்சியில் தானிய உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:14 IST

கள்ளக்குறிச்சி : கோமுகி, மணிமுக்தா அணைகள் மூலம் பாசன வசதி பெறும் ஆயக்கட்டு விளைநிலங்கள் வேகமாக வீட்டுமனைகளாக மாறி வருகின்றன. இதே நிலை நீடித்தால் இப்பகுதியில் உணவுதானிய உற்பத்தி பெருமளவு குறையும் அபாயம் விரைவில் ஏற்படும். விழுப்புரம் மாவட்டம் கல்வராயன் மலையில் உற்பத்தியாகும் கோமுகி ஆற்றின் குறுக்கே கச்சிராயபாளையம் அருகிலும், மணிமுக்தா ஆற்றின் குறுக்கே சூளாங்குறிச்சி அருகிலும் முன்னாள் முதல்வர் காமராஜர் ஆட்சியில் அணை கட்டப்பட்டது. இதில் தேக்கி வைக்கப்படும் நீரை மதகு வழியே பல கி.மீ., தூரத்திற்கு வாய்க்கால்களில் எடுத்துசென்று பாசனத்திற்கு பயன்படுத்தும் வகையில் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கோமுகி அணை மூலம் 10 ஆயிரத்து 860 ஏக்கர் நிலமும், மணிமுக்தா அணைமூலம் 5,493 ஏக்கர் நிலமும் நேரடியாக பாசன வசதி பெறுகின்றன.

இது அணை கட்டும்போது வகுக்கப்பட்ட புள்ளி விபரமாகும். தற்போதய நிலையில் கணக்கெடுத்தால் பலநூறு ஏக்கர் பாசன நிலங்கள் வீட்டுமனைகளாக மாறியுள்ளதை காண முடியும். இதில் கள்ளக்குறிச்சியை ஒட்டியுள்ள சிறுவங்கூர், நீலமங்கலம், வீ.பாளையம், மாடூர், வீரசோழபுரம் ஆகிய கிராமங்களில் உள்ள பெரும்பாலான பரப்பிலான விளைநிலங்களும் மணிமுக்தா அணைமூலம் பாசன வசதி பெறுகின்றன. இந்த நிலங்கள் மெல்ல மெல்ல வீட்டுமனைகளாக மாறிவருவதுதான் அதிர்ச்சியான தகவலாகும்.

தமிழகத்தின் முக்கிய வியாபார நகரங்களில் விற்கப்படும் விலைக்கு போட்டிபோடும் வகை யில் கள்ளக்குறிச்சியில் போடப்படும் வீட்டுமனைகள் ஏக போக உச்சவிலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனை மக்களும் தயக்கமின்றி வாங்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர். கள்ளக்குறிச்சி நகரை சுற்றி குறைந்தது 50 கி.மீ., தொலைவிற்கு பெருநகரங்கள் எதுவும் இல்லாததால் இவ்வூரை சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான கிராம மக்களின் அத்தியாவசிய தேவையை பூர்த்தி செய்யும் நகராக கள்ளக்குறிச்சி உள் ளது. நாளுக்கு நாள் கள்ளக்குறிச்சிக்கு வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இங்கு குடியேறுவதில் பலரும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இவர்களின் ஆர்வத்தை வியாபாரமாக மாற்றும் முயற்சியில் சில ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் முழுநேர தொழிலாக மூன்று போகம் விளையும் வயல்களை வீட்டு மனைகளாக மாற்றி அதிக விலைக்கு விற்று லாபம் பார்க்கின்றனர்.

அணையில் இருந்து நேரடி பாசனம் பெறும் வயல்கள் மிக விரைவான காலத்திற்குள் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டுள்ளன. தற்போது சேலம்- உளுந்தூர்பேட்டை இடையே நான்குவழிச்சாலை அமைக்கப்படுவதால் சாலையை ஒட்டி அமைந்திருந்த நெல் விளைந்த வயல்கள் எல்லாம் வீட்டுமனைகளின் "அளவுக்கல் முளைத்து' பரிதாபமாக காட்சியளிக்கிறது. தமிழகத்தில் மாடர்ன் அரிசி ஆலைகள் அதிகமுள்ள பகுதியாக கள்ளக்குறிச்சி இருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் இப்பகுதியில் நெல் சாகுபடி பரப்பு அதிகம் என்பதாலும், இரு அணைகள் மூலம் பாசன வசதி பெறும் நிலங்கள் அனைத்தும் நெல் சாகுபடிக்கு ஏற்ற மண்வளம் கொண்டதாக இருப்பதுமாகும்.

புன்செய் பயிர்கள் விளைய தகுதியான வயலும், நல்ல நீர்வளம் கிடைத்தும் இவற்றை வியாபார நோக்கில் வீட்டுமனைகளாக மாற்றி வருவதால் கள்ளக்குறிச்சி பகுதியில் நெல் சாகுபடி செய்யப்படும் பரப்பு வெகுவாக குறைந்து வருகிறது. இங்குள்ள அரிசி ஆலைகளுக்கு தேவையான நெல் இப்பகுதியிலேயே கொள்முதல் செய்யப்பட்ட காலம் மலையேறிவிட்டது. தற்போது வெளி மாவட்டங்களில் இருந்து நெல் கொள்முதல் செய்து ஆலையை இயக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு நெல் விளைந்த வயல்கள் நாளுக்கு நாள் வீட்டுமனைகளாக மாறிவருவதே காரணமாகும்.

நெல் சாகுபடிபரப்பு குறைந்து அரிசி உற்பத்தியில் முன்னணியில் இருந்த கள்ளக்குறிச்சி தற்போது தனது தகுதியை மெல்ல மெல்ல இழந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணமாக ரியல் எஸ்டேட் தொழில் இங்கு பெரிய அளவில் உச்சத்திற்கு போனதேயாகும்.வெறும் ஒரு லட்சத்திற்கு விலைகேட்க ஆள்இன்றி கிடந்த வயல்வெளிகள் எல்லாம் கோடிக்கணக்கில் விலை பேசப்படுகிறது. இந்நிலையில் கள்ளக்குறிச்சி மாவட்டமாக விரைவில் அறிவிக்கப்படும் என்று மக்களிடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.

இதனை காரணம் காட்டி பல வயல்களை பிளாட்டுகளாக மாற்றி கலெக்டர் அலுவலகம் அருகில் அமைய உள்ளதாக கூறி லாபம் சம்பாதித்து வருகின்றனர். அணையின் மூலம் பாசன வசதி பெறும் நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதை தடுக்கும் வகையில் அரசு புதிய சட்டம் கொண்டுவந்தால் மட்டுமே இப்பகுதியில் விவசாயம் நலிந்து வருவதை நிறுத்த முடியும். நல்ல விலை கிடைப்பதால் பல விவசாயிகள் தங்கள் நிலங்களை ரியல் எஸ்டேட் புரோக்கர்களிடம்

விற்றுவிடுகின்றனர். இதனால் சாகுபடி பரப்பு வேகமாக இப்பகுதியில் குறைந்து வருகிறது. இதனை தடுத்திட அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**செஞ்சி கூட்டுறவு சங்கத்திற்கு நெல் நாற்று நடவு இயந்திரம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:19 IST

செஞ்சி : செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு அனுப்புவதற்காக நெல் நாற்று நடவு இயந்திரம் வாங்கியுள்ளனர். செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் நெல் நாற்று நடவு செய்யும் தென்கொரிய நாட்டின் இயந்திரத்தை வாங்கியுள்ளனர். விவசாயிகளுக்கு வாடகைக்கு விட உள்ள இந்த இயந்திரத்தின் சாவியை மாவட்ட வருவாய் அலுவலர் வெங்கடாஜலம் செஞ்சி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் ரவிச்சந்திரனிடம் வழங்கினார்.
விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் நடந்த இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகாம்பாள், துணை பதிவாளர் அழகேசன், தனி அலுவலர் ரங்கநாதன், சார் பதிவாளர்கள் ஆரோக்கியராஜ், புரு÷ஷாத்தமன் உடனிருந்தனர்.

**திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் 15 ஆயிரம் நெல் மூட்டைகள் குவிந்தது**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:15 IST

திருக்கோவிலூர் : திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டியில் நேற்று 15 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இடப்பற்றாக்குறையால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். திருக்கோவிலூர் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக நெல் அறுவடை தீவிரமடைந்துள்ளது. நேற்று மார்க்கெட் கமிட்டிக்கு அதிரடியாக 15 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. நேற்று முன்தினம் இரவு நெல் மூட்டைகளை ஏற்றி வந்த மாட்டு வண்டிகள் நீண்ட வரிசையில் பல மணி நேரம் காத்து நிற்க வேண்டியநிலை உருவானது. இரவு 12 மணி முதல் திருக்கோவிலூர்-விழுப்புரம் சாலையில் போக்குவரத்து பாதித்தது. போலீசார் தலையிட்டு போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி, கமிட்டி வளாகத்தினுள் மட்டு வண்டிகளை அனுப்பினர். கமிட்டி வளாகம் முழுவதும் நெல் மூட்டைகள் நிரம்பி வழிந்ததால், இடப்பற்றாக்குறை ஏற்பட்டது.

நெல் வரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சி அடையாமல் இருக்க 9 ஆயிரம் மூட்டைகள் மட்டுமே ஏலத்திற்கு அனுமதிக்கப் பட்டது. மீதமுள்ள 6 ஆயிரம் மூட்டை நெல் இன்றைய(25ம் தேதி) ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. சன்னரக நெல் மூட்டைக்கு 25 ரூபாய் வரை கூடுதலாக விலை போனது விவசாயிகளை மகிழ்ச்சியடையச் செய்தது. 75 கிலோ கொண்ட நெல் மூட்டையின் சராசரி விலை பொன்னி 900 ரூபாய், ஏ.டி. டி.,-39 ரகம் 680, ஏ.டி. டி.,-37 ரகம்760, ஏ.டி. டி.,-45 ரகம் 700 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டது.

**துறிஞ்சலாறு உபவடிநில விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,01:39 IST

திருக்கோவிலூர் : வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் துறிஞ்சலாறு உபவடிநில விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி முகாம் மணலூர்பேட்டையில் நடந்தது. நீர் வள, நிலவள திட்டத்தின் கீழ் தமிழக அரசு பல்வேறு துறைகள் சார்பில் அளிக்கும் மானியங்கள், வேளாண் விளை பொருட்களை விற்பனை சந்தையில் லாபகரமாக விற்பனை செய்யும் தொழில் நுட்ப யுக்திகள், மக்காச்சோள சாகுபடி குறித்து பயிற்சியளித்தனர். வேளாண் வணிகத்துறை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் செந்தில் வரவேற்றார். தொழிலதிபர் காசிவிஸ்வநாதன், உதவி வேளாண் அலுவலர் சபரிதாசன், துணை வேளாண்மை அலுவலர் குமார் கருத்துரை வழங்கினர். நீர் பாசன சங்க தலைவர்கள், உறுப்பினர்கள், வேளாண் விளை பொருட்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். உதவி வேளாண்மை அலுவலர் முத்து நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு 27ம் தேதி பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:59 IST

ஓசூர்: தளி அடுத்த பிக்கனப்பள்ளி கிராமத்தில், ஆத்மா திட்டத்தில் விவசாயிகளுக்கு, வரும் 27ம் தேதி, பயிற்சி வழங்கப்படுகிறது.
தளி வட்டார உதவி வேளாண்மை அலுவலர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கை: தளி வட்டாரம், கோலட்டி பஞ்சாயத்திற்குட்பட்ட, பிக்கனப்பள்ளி கிராமத்தில், ஆத்மா திட்டத்தின் கீழ் வேளாண் விற்பனை துறை சார்பில் பயிர் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி, வரும் 27ம் தேதி, காலை 10 மணிக்கு நடக்கிறது. விவசாயிகளுக்கு வேளாண்மை அலுவலர்கள், புதிய சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி, அறுவடை மற்றும் பயிர் பாதுகாப்பு ஆகியவை குறித்து ஆலோசனை மற்றும் பயிற்சி

வழங்குகின்றனர். விவசாயிகள் இந்த பயிற்சி முகாமில் தவறாமல் கலந்து கொண்டு, பயன்பெற கேட்டு கொள்கிறோம்.

**தேசியளவில் காய்கறி விலை அறிய விவசாயிகள் ஆவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,01:46 IST

கோபிசெட்டிபாளையம்: தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் நாள்தோறும் நிலவும், காய்கறி விலை நிலவரத்தை, எஸ்.எம்.எஸ்., மூலம் இலவசமாக அறியும் சேவையைப் பெற, விவசாயிகள் ஆர்வத்துடன் பெயர் பதிவு செய்கின்றனர். ஹைதராபாத் "உன்னத கணினி மையம்' மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இணைந்து, விவசாயிகளுக்கு காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை நிலவரம் குறித்து, நாள்தோறும் இலவசமாக எஸ்.எம்.எஸ்., அனுப்பி வருகின்றன. சென்னை கோயம்பேடு, கோவை, ஒட்டன்சத்திரம், மேட்டுபாளையம், ஓசூர், மதுரை, தலைவாசல், பண்ருட்டி, கும்பகோணம், திருநெல்வேலி, கொச்சி, பெங்களூரு ஆகிய 13 மார்க்கெட்களில் இருந்து, விவசாயப் பட்டதாரிகள் மூலம் நாள்தோறும் காலை 10 மணிக்குள் விலை நிலவரம் சேகரிக்கப்படுகிறது.

இவ்விபரம், காலை 11 மணிக்குள் கோவை வேளாண் பல்கலைக்கழகத்துக்கு, அனுப்பப்படுகிறது. மதியம் 12 மணி முதல் 1 மணிக்குள் பல்கலைக்கழக வெப்சைட்டில் விலை நிலவரம் வெளியாகிறது. மதியம் 3 மணிக்குள் தமிழகத்தில் உள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ்., மூலம் விலை நிலவரம் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது. இலவச சேவையை பெற விரும்பும் விவசாயிகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் வெப்சைட்டில் பதிவு செய்து கொள்ளலாம். பதிவு செய்யும் போது, ஃபோன் எண்ணுக்கு முன், கண்டிப்பாக "0' சேர்க்க வேண்டும். இந்த சேவையை பெறுவதற்காக நாள்தோறும் ஏராளமான விவசாயிகள், தனியார் இன்டர்நெட் மையங்கள் மூலம் பெயர் பதிவு செய்து வருகின்றனர். விபரங்களுக்கு, கோவை வேளாண் பல்கலைக்கழகத்தை, 0422 661 13 83, 661 13 70 ஆகிய ஃபோன் எண்களில் விவசாயிகள் தொடர்பு கொள்ளலாம்.

**பெரிய வெங்காயம் விலை சரிவு:சின்ன வெங்காயம் விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:07 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி சந்தையில், பெல்லாரி வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால், விலை சரிய துவங்கியுள்ளது. அதேசமயம் சின்ன வெங்காயம் வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரிக்க துவங்கியுள்ளது. இரு நாட்களாக பொள்ளாச்சி சந்தைக்கு மகாராஷ்டிரா

பகுதிகளிலிருந்து பெல்லாரி வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் இரண்டு லோடு வெங்காயம் அதிகமாக வந்துள்ளது. வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளதால், வெளி மார்க்கெட்டிற்கு இங்கிருந்து அதிகளவு வெங்காயம் அனுப்பப்படுகிறது. மேலும், விலையிலும் சரிவு ஏற்பட்டுள்ளது. நேற்றைய நிலவரப்படி பொள்ளாச்சி மொத்த மார்க்கெட்டில் ஒரு கிலோ பெல்லாரி வெங்காயம் கிலோ 30 முதல் 35 ரூபாய் வரை விலை போனது. சில்லரை வர்த்தகத்தில் ஒரு கிலோ வெங்காயம் 40 முதல் 45 ரூபாய் வரை விற்றது. பொள்ளாச்சி பெல்லாரி வெங்காய மொத்த வியாபாரிகள் கூறுகையில், "மகாராஷ்டிரா பகுதியிலிருந்து வரத்து அதிகரித்து வருவதால், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. வரும் வாரங்களில், வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், தற்போதைய விலையை விட குறையும் வாய்ப்புள்ளது' என்றனர்.

கடந்த நான்கு மாதங்களாக உயர்ந்திருந்த பெல்லாரி வெங்காயத்தின் விலை சரிய துவங்கியுள்ள நேரத்தில், சின்ன வெங்காயம் விலை உயரத்துவங்கியுள்ளது. கர்நாடகா பகுதிகளிலிருந்து வரத்து இல்லாததால், தமிழக பகுதிகளிலிருந்து மட்டும் பொள்ளாச்சி சந்தைக்கு சின்ன வெங்காயம் வரத்துள்ளது. பல இடங்களில், வெங்காய பயிர்கள் மழைக்கு நனைந்து சேதமடைந்ததாலும், போதிய விளைச்சல் இல்லாததாலும் வரத்து குறைந்துள்ளது. கடந்த ஒரு மாதத்தில், பொள்ளாச்சி சந்தைக்கு வரத்து பாதியாக சரிந்துள்ளது. போதிய வரத்து இல்லாததால், விலை உயர்ந்து வருகிறது. ஒரு வாரத்தில் சின்ன வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி மொத்த மார்க்கெட்டில் ஒரு கிலோ வெங்காயம் 50 முதல் 55 ரூபாய்க்கும், சில்லரை வர்த்தக்கத்தில் 60 முதல் 65 ரூபாய்க்கும் விற்றது. சின்ன வெங்காயம் மொத்த வியாபாரிகள் கூறுகையில், "தமிழகத்தின் ஒரு சில பகுதிகளிலிருந்து மட்டும் பொள்ளாச்சி சந்தைக்கு சின்ன வெங்காயம் வரத்துள்ளது. வரத்து குறைந்துள்ளதால், விலை அதிகரித்து வருகிறது. பொள்ளாச்சி, உடுமலை சுற்றுப்பகுதிகளிலிருந்து வரத்து அதிகரிக்க இன்னும் ஒரு மாதமாகும். அதுவரை இதே விலை நீடிக்கும் வாய்ப்புள்ளது. உள்ளூர் வரத்து அதிகரித்தாலும், விலை பெரியளவு சரிவு இருக்காது' என்றனர்.

**பூந்துறையில் ரூ. 75 லட்சத்துக்கு தே.பருப்பு ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,01:47 IST

ஈரோடு: அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கடந்த வாரம் 75 லட்சம் ரூபாய்க்கு தேங்காய் பருப்பு ஏலம் நடந்தது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை தேங்காய் பருப்பு ஏலம் நடக்கிறது. செவ்வாய்க்கிழமை எள் ஏலமும், சனிக்கிழமை தேங்காய், நிலக்கடலை ஏலமும் நடக்கிறது. வெள்ளிக்கிழமை ஏலத்தின் போது 2,000 மூட்டைகளுக்கு மேல் தேங்காய் பருப்பு ஏலம் போகும். கோல்டுவின்னர், விவிடி

நிறுவனத்தினர் மற்றும் கேரள மாநிலத்தை சேர்ந்த வியாபாரிகள் தேங்காய் பருப்புகளை அதிகம் வாங்கிச் செல்கின்றனர். வெள்ளகோவில், அறச்சலூர், சென்னிமலை, பவானி, கவுந்தப்பாடி, பூந்துறை, கஸ்பாபேட்டை, காங்கேயம் பகுதி விவசாயிகள் தேங்காய் பருப்புகளை ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர்.

வியாபாரிகள் கூறுகையில், "தற்போது சீஸன் குறைவாக இருந்தும் 2,000க்கும் மேற்பட்ட மூட்டைகள் வந்திருப்பது ஆச்சர்யத்தை கொடுக்கிறது. இங்கு வாங்கப்படும் தேங்காய் பருப்பு தரமானதாக இருக்கும்' என்றனர். விவசாயிகள் கூறுகையில், "மாசி மாதம் முடிந்ததும் தேங்காய் பருப்பு உற்பத்தி அதிகரிக்கும். பனிக்காலமாக இருப்பதால் தற்போது குறைவாகவே உற்பத்தி நடக்கிறது. இருந்தாலும் நல்ல விலை கிடைப்பது மகிழ்ச்சியாக உள்ளது' என்றனர்.
அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் தண்டபாணி கூறியதாவது: சென்ற வெள்ளிக்கிழமை நடந்த ஏலத்தில் 2,800 மூட்டை தேங்காய் பருப்பு வந்தது. தரமுள்ள தேங்காய் பருப்பு ஒரு கிலோ 60 முதல் 62 ரூபாய் வரை ஏலம் போனது.

ஒரே நாளில் 75 லட்சம் ரூபாய்க்கு தேங்காய் பருப்பு ஏலம் நடந்துள்ளது. விவசாயிகளுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்யப்படுவதால், இங்கு அதிகளவு தேங்காய் பருப்பு கொண்டு வரப்படுகிறது. சில வாரங்களாக சனிக்கிழமை அன்று நிலக்கடலை ஏலம் நடக்கிறது. சென்ற வாரம் 151 மூட்டை நிலக்கடலை ஏலத்துக்கு வந்தது. திண்டுக்கல், தாராபுரம் பகுதியை சேர்ந்த மிட்டாய் வியாபாரிகள் நிலக்கடலையை வாங்கிச் சென்றனர். 10 ஆயிரம் தேங்காய் ஏலத்துக்கு வந்தது. ஒரு பெரிய தேங்காய் 12 ரூபாய்க்கும், சிறிய தேங்காய் 3.50 ரூபாய்க்கும் ஏலம் போனது. மாசி மாதம் முடிந்ததும் தேங்காய் பருப்பு ஏலம் அதிகளவு நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**குறைந்த விலையில் காய்கறி மார்க்கெட்: ஜன., 27ல் மதுரையில் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,01:22 IST

மதுரை : மதுரையில் குறைந்த விலையில் காய்கறி விற்பனை செய்ய 4 தற்காலிக மார்க்கெட்டுகள் ஜன. 27ம் தேதி திறக்கப்பட உள்ளது. தமிழகத்தில் சமீபகாலமாக அனைத்து பொருட்களின் விலைவாசியும் அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலையும் இறக்கை கட்டி பறக்கிறது. இது பல குடும்பங்களை நேரடியாக பாதிப்பதால், அவற்றின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை எடுத்தது. முதல்வர் கருணாநிதி அதிகாரிகளுடன் ஆலோசித்தார். இதையடுத்து சென்னை, கோவை, மதுரை போன்ற முக்கிய மாநகராட்சிகளில் குறைந்த விலையில் காய்கறிகளை விற்பனை செய்யும் மார்க்கெட்டுகளை திறப்பது என முடிவெடுக்கப்பட்டது. கூட்டுறவுத் துறை மூலம் காய்கறிகளை விவசாயிகளிடம் நேரடியாக வாங்கி, வெளிமார்க்கெட் விலையைவிட "கம்மி'யான ரேட்டில் வினியோகிக்கப்பட உள்ளது. மதுரையில் இவ்வகையில் 10

மார்க்கெட்டுகள் துவக்கப்படஉள்ளது. இதற்காக கலெக்டர் காமராஜ், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் குமார் உட்பட அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். முதற்கட்டமாக ஜன. 27ம் தேதி 4 இடங்களில் மார்க்கெட்டுகளை திறக்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி ஆரப்பாளையம் பகுதியில் ஒரு கல்யாண மண்டபம், மகபூப்பாளையம் பகுதியில் எம்.எல்.ஏ., அலுவலகம், எல்லீஸ்நகரில் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு புதிய கட்டடத்தில் உள்ள சில கடைகள், ஒத்தக்கடையில் கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கடையில் இந்த மார்க்கெட்டுகள் தற்காலிகமாக அமைக்கப்பட உள்ளன. இவை விலைவாசி குறையும் வரை செயல்படும். இவற்றின் வெற்றியை பொறுத்து, கூடுதல் கடைகள் திறக்கப்படும். இவையே உழவர்சந்தை போல அமையும் என தெரிகிறது.

**"சவ்சவ்' காய்கறி விலை கடும் வீழ்ச்சி : ஓசூர் விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 25,2011,00:56 IST

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், ஏற்றுமதியாகும், "சவ்சவ்' காய், வெளியூர் சந்தைகளில் போதிய வரவேற்பு இல்லாததால், விலை வீழ்ச்சியடைந்துள்ளது.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆண்டு முழுவதும் குளிர்ந்த காலநிலை கொண்ட ஓசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை தாலுகாவில் காய்கறி அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் காய்கறி, தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும்; கர்நாடகா, ஆந்திரா மற்றும் வட மாநிலங்களுக்கும் தினமும் ஏற்றுமதியாகிறது. குறிப்பாக குளிர் காய்கறியான, சவ்சவ்வை, ஓசூர் தாலுகாவில் ஆண்டு முழுவதும் விவசாயிகள் சாகுபடி செய்கின்றனர்.

ஓசூர், பேரிகை, டி.கொத்தப்பள்ளி, பாகலூர், பெலத்தூர், பேளகொண்டப்பள்ளி பகுதியில், 1,000 ஏக்கரில் சவ்சவ் காய்கறி சாகுபடி செய்துள்ளனர். சவ்சவ் சாகுபடியை பொறுத்தவரையில் ஆரம்பக்கட்ட சாகுபடி செலவு அதிகமாக உள்ளது. ஒரு ஏக்கருக்கு சாகுபடி செய்வதற்காக, கம்பி பந்தல் போடுவதற்கு, 2 லட்சம் ரூபாய் செலவாகிறது. சாகுபடி செலவு, 50 ஆயிரம் ரூபாய் ஆகிறது. சாகுபடி செய்த மூன்று மாதத்தில் சவ்சவ் அறுவடை செய்யப்படுகிறது. ஒரே செடியில் மூன்று முறை அறுவடை செய்ய வாய்ப்புள்ளதால் கடந்த காலத்தில் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. மூன்று மாதம் முன் ஒரு கிலோ சவ்சவ், 15 முதல் 20 ரூபாய் ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது ஒரு கிலோ, 7 ரூபாய் வரை விற்பனையாகிறது.

இதுகுறித்து டி.கொத்தப்பள்ளியை சேர்ந்த விவசாயி முனிராஜ் கூறியதாவது: பொதுவாக சவ்சவ் காய்கறி அன்றாட சமையலில் குழம்பு மற்றும் கூட்டு வைப்பதற்கு அதிகளவில்

பயன்படுத்தப்படுகிறது. அதிக குளிர்ச்சிகொண்ட சவ்சவ் காய்கறி வெப்பம் அதிகமுள்ள சென்னை, வேலூார் மற்றும் தென்மாவட்டங்களில் நல்ல வரவேற்பு இருக்கும். நடப்பாண்டு நாடு முழுவதும் குளிர் காலம் டிசம்பரை தாண்டி இன்னும் நீடிக்கிறது. அதனால், உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் சவ்சவ் காய்கறி விலை குறைந்துள்து. கூலி ஆள் சம்பளம், செடி பராமரிப்பு மற்றும் முதலீட்டு பணத்தை கூட எடுக்க முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளோம். தற்போது ஓசூர் பகுதியில் வழக்கத்திற்கு மாறாக ஒரு விதமான குளிர்காற்று அடிக்கிறது. இதில் செடிகள் வாடி உற்பத்தியும் 50 சதவீதம் குறைந்துள்ளது. முன்பு ஏக்கருக்கு, 50 டன் கிடைத்தது. தற்போது வெறும், 25 டன் கிடைக்கிறது. இதனால், பயிரையும் காப்பாற்ற முடியாமல் விலையும் கிடைக்காமல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தமிழகத்தில் பருத்தி கொள்முதல் அதிகரிப்பு விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,23:36 IST

உடுமலை: தமிழகத்தில் இயங்கும் நூற்பாலைகளுக்கு பருத்தி தேவைப்படுவதால், விவசாயிகளிடமிருந்து பருத்தியை நேரடியாக கொள்முதல் செய்ய துவங்கியுள்ளனர். இதனால், பருத்தி குவிண்டாலுக்கு 2,000 ரூபாய் வரை விலை அதிகரித்துள்ளது. தமிழகத்தில் இயங்கும் நூற்பாலைகளுக்கு ஆண்டுக்கு 12 லட்சம் பருத்தி பொதிகளுக்கு தேவை உள்ளது. ஆனால், 7.5 லட்சம் அளவிற்கே பருத்தி பொதிகள் மட்டுமே உற்பத்தியாகியிருந்தது. எனவே, அரியானா, குஜராத், ஆந்திரா மாநிலங்களிலிருந்து பருத்தி அதிகளவு கொள்முதல் செய்யப்படுகிறது. உள்நாட்டு தொழிற்சாலைகளுக்கு குறைந்த விலையில் பருத்தி கிடைக்க ஏற்றுமதிக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்துள்ளது. 55 லட்சம் பொதிகள் ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ள நிலையில், விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் கள்ளசந்தையில் பருத்தியை பதுக்குவது அதிகரித்துள்ளது. இந்நிலையில், பருத்தி உற்பத்தியாகும் மாநிலங்களில் அறுவடை சீசன் துவங்கியுள்ளதால், கொள்முதல் செய்ய போட்டி ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இயங்கும் நூற்பாலைகளுக்கு நூலிழை ஏற்றுமதிக்கு அதிக வாய்ப்பு கிடைத்துள்ளதால் உற்பத்தி அதிகரித்துள்ளது. எனவே, பருத்திக்கு தேவை அதிகரித்துள்ளது.

இதற்காக, தமிழகத்தில் பரவலாக பயிரிடப்பட்டுள்ள சாகுபடி பகுதிகளில் பருத்தியை நேரடியாக கொள்முதல் செய்ய துவங்கியுள்ளனர். நேரடி கொள்முதலால் பருத்திக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. கடந்த சீசனை விட குவிண்டாலுக்கு 2,000 வரை விலை கூடுதலாகி இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். உடுமலை பகுதியில் பி.ஏ.பி., மண்டல பாசனத்திற்கு மிக நீண்ட இழை பருத்தி ரகம் அதிகளவு பயிரிடப்பட்டது. சில வாரங்களாக அறுவடை

தீவிரமடைந்துள்ளது. மிக நீண்ட இழை பருத்தி குவிண்டாலுக்கு சராசரியாக 6,800 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. டி.சி.எச்., போன்ற ரகங்களுக்கு 7,000 ரூபாயும், நடுத்தர இழை ரகங்களுக்கு 5,000 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. கடந்த சீசனில் மிக நீண்ட இழை பருத்திக்கு 5,000 ரூபாய் வரை மட்டுமே விலை கிடைத்தது. இந்த சீசனில் கிடைத்து வரும் நல்ல விலையால், அடுத்த சீசனில் பருத்தி சாகுபடி செய்யும் பரப்பளவு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**மக்காச்சோளம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,22:39 IST

உடுமலை: வெளிமாநில வரத்து குறைந்துள்ளதால் மக்காச்சோள விலை உயர்ந்து வருகிறது. உடுமலை மற்றும்
சுற்றுப்பகுதிகளில் பயிரிடப்பட்ட மக்காச்சோளம் அறுவடை கடந்த இரண்டு வாரங்களாக தீவிரமாக நடக்கிறது. பொங்கல் பண்டிகை இடைவெளிக்கு பிறகு அறுவடை பணிகளை விவசாயிகள் துவக்கியுள்ளனர். இந்நிலையில், கர்நாடகா போன்ற மாநிலங்களிருந்து வரத்து குறைந்துள்ளதால் விலை அதிகரித்து வருகிறது. பொங்கலுக்கு முன் சராசரியாக நூறு கிலோ மூட்டை 930 ரூபாய் வரை விற்றது. தற்போது 950 ரூபாய்க்கு நேற்று உடுமலையில் மக்காச்சோளம் கொள்முதல் செய்யப்பட்டது.

**பாலமேடு பகுதியில் மொச்சை விளைச்சல் அமோகம் : கிலோ ரூ. 20க்கு விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,23:45 IST

பாலமேடு : பாலமேடு பகுதியில் கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு மொச்சை விளைச்சல் அதிகம். பாலமேடு பகுதியில் விளையும் கொய்யா, முருங்கை, மா, சாத்தையாறு அணையில் கிடைக்கும் மீன் என பிற இடங்களில் கிடைப்பதை விட இங்கு ருசி அதிகம். அதே போல மானாவாரியாக பயிரிட்டு பருவ மழையால் வளர்ந்து, பனியில் நனைந்து, பலன் தரும் பாலமேடு மொச்சைக்கு கூடுதல் ருசி உண்டு. மதுரை உட்பட பல இடங்களில் பாலமேடு மொச்சை என கூவி விற்கும் அளவுக்கு தனிமவுசும் உண்டு. கற்கள் நிறைந்த செம்மண் கரிசல் நிலத்தில் விளைந்து பலன் தருவதே இதற்கு காரணம். ஆடிப்பட்டத்தில் விதைத்து தையில் பலன் தரும் மொச்சைக்கு, இந்த ஆண்டு பருவ மழை தவறியதால் விவசாயிகள் கவலையில் ஆழ்ந்தனர். இந்நிலையில் எதிர்பாராத விதமாக தொடர் மழை பெய்தது.

இதனால் மானாவாரி பயிர்கள் துளிர் விட்டு விவசாயிகளுக்கு நல்ல பலனை தந்தன. பருவ நிலை மாற்றம் காரணமாக இந்த ஆண்டு கூடுதலாக இரண்டு மாதம் மொச்சை கிடைக்கும் வாய்ப்பை

விவசாயிகள் பெற்றுள்ளனர். ஆரம்பத்தில் கிலோ ரூ. 40க்கு விற்ற மொச்சை அதிக விளைச்சல் காரணமாக ரூ, 20 க்கு கிடைக்கிறது. பாலமேடு விவசாயி பெரியசாமி: பாலமேடு மதுரை ரோட்டில் மூன்று ஏக்கர் நிலத்தில் தனி மொச்சையாக பயிரிட்டுள்ளேன். உரிய காலத்தில் மழை பெய்திருந்தால் நல்ல லாபம் கிடைத்திருக்கும். இனி மழை பெய்ய வாய்ப்பில்லை. பனியால் மட்டுமே விளையும் வாய்ப்பு உள்ளது. பனி அதிகம் இருக்க வேண்டும், அதன் மூலம் பலன் பெற வேண்டும்.இதற்கு இயற்கை ஒத்துழைக்க வேண்டும் என கூறினார். வியாபாரி செல்வம்; இந்த ஆண்டு மொச்சை வியாபாரம் ஆரம்பத்தில் நல்ல சூடு பிடித்தது. கிலோ ரூ. 40க்கு விற்கும்போது நல்ல லாபம் இருந்தது. தற்போது விவசாயிகளிடமிருந்து வாங்கிய பொருளை அழிக்க வேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளோம் என தெரிவித்தார். வெங்காயம், கத்தரி, தக்காளி, உருளை, என அனைத்து காய் கறிகளும் அதிக விலைக்கு விற்கும் போது, தரமான சுவை மிகுந்த மொச்சை குறைந்த விளைக்கு கிடைப்பது இயற்கையின் வரப்பிரசாதமே.

**விவசாயிகளுக்கு இடுபொருள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 24,2011,23:45 IST

திருப்பரங்குன்றம் : திருப்பரங்குன்றத்தில், தமிழ்நாடு நீர்வள, நீலவள திட்டத்தின்கீழ் தெக்காறு உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு, இடுபொருள் வழங்கும் விழா நடந்தது.ளோண்மை துணை இயக்குநர்(மாநில திட்டம்) சம்பத்குமார் தலைமை வகித்தார். ஊராட்சி ஒன்றிய தலைவர் புஷ்பலதா முன்னிலை வகித்தார். விவசாயிகளுக்கு, இடுபொருள் வழங்கும் திட்டத்தில் பாசிப்பயறு, பி.ஏ.பி. உரம், உயிர் உரம், விதைத்தெளிப்பான் ஆகியன மானியத்தில் வழங்கப்பட்டது. திருப்பரங்குன்றம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் செல்வன், விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கினார். உதவி இயக்குநர் மோகன்குமார், தோட்டக்கலை துறை குறித்து பேசினார். ளோண் அலுவலர் உலகம்மாள், உதவி அலுவலர்கள் அழகேசன், பாண்டி, ரமீலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மீன் வளர்ப்பு தொழிலில் கேரளா முதலிடம் வகிக்கிறது மீன்வளத்துறை மந்திரி பெருமிதம்

பெரும்பாவூர்,ஜன.25–

இந்தியாவை பொறுத்தவரை மீன் வளர்ப்பு தொழிலில் கேரளா முதலிடம் வகிக்கிறது என்று மீன்வளத்துறை மந்திரி சர்மா கூறினார்.

கருத்தரங்கம்

கேரள மாநிலம், கொச்சியில் உள்ள லீமெர்டியன் ஓட்டலில் ஏசியன்பசிபிக்அக்கோகல்சர் 2010 என்ற கலாசார விழா நடந்தது. விழாவை மீன்வளத்துறை மந்திரி சர்மா தொடங்கி வைத்தார். விழாவில் மீன்வளத்துறை தலைவர் லீனாநாயர், உலக அக்வாகல்சர் சொசைட்டி ஆசியன் பசிபிக் தலைவர் ராய், தேசிய மீன்வளர்ச்சி கழக ஆணையர் கிருஷ்ணய்யா, மாநில மீன்வளர்ச்சி இயக்குனர் ஷேக்பரீது, கொச்சி மீன்வளர்ச்சி கல்லூரி முதல்வர் மோகன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கில் வல்லுநர்கள் மீன் வளர்ப்பு தொழில்முறைகளும், மீன்களை விற்பனை செய்வது குறித்தும் பேசினார்கள். அதோடு, மீன் வளர்ப்பின் போது கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பம் குறித்தும் வல்லுநர்கள் எடுத்துரைத்தனர்.

கருத்தரங்கில் மீன்வளத்துறை மந்திரி சர்மா பேசியதாவது:–

கேரளா முதலிடம்

கேரளாவில் இடது முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மீனவர்களின் நலனில் பல்வேறு முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளன. கடலில் சென்று மீன்பிடிப்பதற்கு ஏதுவாக மானிய விலையில் படகுகளும், டீசலும் வழங்கப்படுகிறது. அதே போல் மீன்களை விற்பதற்கு சந்தை கூடமும் அமைத்து கொடுத்து உள்ளது.

தொடர்ந்து மீனவர்களின் நலனுக்காக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீன்கள் உற்பத்தி செய்வதற்காகவும் கடனுதவி வழங்கப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மீன்கள் உற்பத்தியில் இந்திய அளவில் கேரளா முதலிடம் வகிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## புதிய நிறுவனங்கள் களம் இறங்குவதால் இந்திய பிஸ்கெட் சந்தையில் கடும் போட்டி உருவாகிறது



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

குளிர்பானங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் தயாரிப்பில் சர்வதேச அளவில் முன்னிலை வகித்து வரும் அமெரிக்காவைச் சேர்ந்த பெப்சிகோ நிறுவனம், அடுத்த மாதம் அதன் பிரபல குவாக்கர் பிராண்டில் ஓட்ஸ் சார்ந்த உயர்தர பிஸ்கெட் அறிமுகம் செய்ய உள்ளது. இதனால் இந்திய பிஸ்கெட் சந்தையில் கடும் போட்டி உருவாகும் என்று கூறப்படுகிறது.

சந்தை மதிப்பு

நம் நாட்டில் பிஸ்கெட் தயாரிப்பு துறையின் சந்தை மதிப்பு (மொத்த வருவாய்) ரூ.11,000 கோடியாக உள்ளது. இந்தியாவில் தனிநபர் பிஸ்கெட் சாப்பிடும் அளவு ஆண்டுக்கு சராசரியாக 2 கிலோ என கணக்கிடப்பட்டுள்ளது. இது, அமெரிக்காவில் 8 கிலோவாகவும், இங்கிலாந்தில் 12 கிலோவாகவும் உள்ளது. இந்திய பிஸ்கெட் சந்தையில் பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ், பார்லே ஆகிய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

இந்தியாவின் அதிக மக்கள்தொகையால் உணவுப் பொருள்கள் தயாரிக்கும்

*நிறுவனங்களுக்கு வளமான வர்த்தக வாய்ப்புகள் உள்ளன. எனவே வெளிநாட்டு நிறுவனங்கள் இச்சந்தையில் களம் இறங்க விரும்புகின்றன. உதாரணமாக, அமெரிக்காவின் கிராஃப்ட் ஃபுட்ஸ் நடப்பாண்டு இறுதிக்குள் இச்சந்தையில் கால் பதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

*பிஸ்கெட் அல்லாத வேறு நுகர்பொருள்களை தயாரிக்கும் நிறுவனங்களும், பிஸ்கெட் தயாரிப்பில் ஆர்வம் காட்டி வருகின்றன. இந்த வகையில், பிரபல ஹார்லிக்ஸ் பிராண்டை தயாரித்து விற்பனை செய்து வரும் கிளாக்சோ ஸ்மித்கிளைன் கன்ஸ்யூமர் ஹெல்த்கேர், சென்ற ஆண்டில், சாதாரண மற்றும் கிரீம் பிஸ்கெட்டுகள் தயாரிப்பில் இறங்கியது. ஹோட்டல்கள் முதல் நுகர்பொருள்கள் வரை பரந்து விரிந்திருக்கும் ஐ.டி.சி. நிறுவனம் சன்ஃபீஸ்ட் என்ற பிஸ்கெட் பிராண்டை தயாரித்தளிக்கிறது. இவ்வாறு, இதர துறைகளைச் சேர்ந்த மிகப் பெரிய நிறுவனங்களுடன், பிரியா கோல்டு மற்றும் கிரீமிகா போன்ற சிறிய நிறுவனங்களும் பிஸ்கெட் தயாரிப்பில் ஈடுபட்டு வருவதால் பிரிட்டானியா போன்ற நிறுவனங்கள் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன.*

*மாரிக்கோ*

*இந்நிலையில் பிஸ்கெட் தயாரிப்பு துறையில் இணைத்தல் மற்றும் கையகப்படுத்துதல் நடவடிக்கைகளும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பாராசூட் தேங்காய் எண்ணெய் மற்றும் சஃபோலா சமையல் எண்ணெய் பிராண்டுகளைக் கொண்டுள்ள மாரிக்கோ நிறுவனம் பெங்களூரைச் சேர்ந்த யூனிபிக் இந்தியா நிறுவனத்தை வாங்குவதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்று கூறப்படுகிறது. ரூ.130 கோடிக்கு 51 சதவீத பங்குகள் கைமாற உள்ளதாக உறுதிப்படுத்தப்படாத சில தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்த இரண்டு நிறுவனங்களும் இது குறித்து கருத்து தெரிவிக்கவில்லை.*